IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 32/2026 - PW-3

| | |
|---|---|
| Name | திரு. கோபி |
| Husband/Father Name | மும்மூர்த்தி |
| Village /Area | கடலூர் |
| Taluk | கடலூர் |
| Occupation | உதவி ஆய்வாளர் |
| Age | 44 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.07.2026.

**(எதிரி 1 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரி 2 காணொளி மூலம் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது உதவி ஆய்வாளராக ராணிப்பேட்டை மது விலக்கு அமலாக்க பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2025 அன்று 14 மணிக்கு அரக்கோணம் நகர காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது நானும் என்னுடன் காவலர் திவாகர் மற்றும் காவலர் சத்தியநாராயணன் இவர்களுடன் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகாக ரோந்து மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கைகாக அரக்கோணம் பஜாரில் கண்காணித்து கொண்டிருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அரக்கோணம் to திருவள்ளூர் செல்லும் சாலையில் அம்பேத்கர் மன்றம் முன்பாக இரண்டு நபர்கள் ஒருவர் கையில் பட்டா கத்தியை வைத்துக் கொண்டு கலாட்டா செய்து கொண்டிருப்பதாக கிடைத்த தகவலை பெற்று அவ்விடத்துக்கு சென்று முன் எச்சரிக்கை நடவடிக்கையாக போலீஸ் பார்ட்டி சகிதம் மேற்படி நபர்களை பிடித்து விசாரிக்க ஒருவர் சுரேஷ்குமார், த/பெ.சுகுமார், சிவராம் தெரு, அம்பேத்கர் நகர், அரக்கோணம், மற்றொருவர் டேனியல், த/பெ.திவ்யராஜ், அந்தோனியார் பஜனை கோயில் தெரு, அம்பேத்கர் நகர், அரக்கோணம் எனக் கூறியவர்களை கைது செய்வதற்கான காரணம் கூறி 14.15 மணிக்கு கைது செய்து கைது செய்த விவரத்தை அவர்களுடைய

உறவினர்களுக்கு தெரிவித்தும் எதிரி சுரேஷ் எந்த வித அச்சுறுத்தலுமின்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உடனிருந்த சாட்சிகள் முன்னிலையில் 14.15 யிலிருந்து 15.15 மணி வரை பதிவு செய்யப்பட்டது. மேற்படி எதிரிகளை கையில் வைத்திருந்து 2 அடி நீளமுள்ள பட்டா கத்தியை அதே போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 15.30 முதல் 16 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் 16.15 மணிக்கு நிலையம் வந்து எதிரிகள் மீது அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்.664/2025, U/s.7(1)(a) of CLA Act r/w.25(1A) Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து திரேக சோதனைக்கு பின் பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் எதிரிகளுக்கு நீதிமன்ற அடைப்பு காவல் வேண்டி எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் குற்றவியல் நடுவர் அரக்கோணம் அவர்கள் முன் ஆஜர் படுத்தப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம்–95 **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பஜாரிலிருந்து சம்பவ இடம் 1/2 கி.மீ. சம்பவ இடத்துக்கு 5 நிமிடத்துக்குள் பஜாரிலிருந்து சென்றோம். நாங்கள் எவ்வளவு தொலைவில் எதிரிகள் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள் என்பதை பார்த்தோம் என்று முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

ரோந்து பணிக்கு செல்லும் போது எங்களுடன் லத்தியை எடுத்து செல்வோம். சம்பவ தினத்தன்று எதிரிகளை பிடிப்பதற்காக லத்தியுடன் தான் சென்றோம் வேறு எந்த பொருட்களும் எடுத்து செல்லவில்லை.

என்னுடைய முதல் விசாரணையில் எந்த எதிரியிடமிருந்து கத்தியை கைப்பற்றியதாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் காவல் நிலையத்தில் தான் பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல சம்பவ இடத்தில் தான் பதிவு செய்தேன்.

சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னல் சரிதான். எதிரிகள் சம்பவ இட பகுதியை சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான்.

படிவம்–95 ல் சாட்சிகளின் கையொப்பம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் தான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தை நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

சம்பவ இடத்தை காண்பிக்க கூடிய மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் இந்த வழக்கில் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் சரித்திர பதிவேடு எதிரிகள் என்று சொன்னால் சரிதான்.

அந்த அடிப்படையில் தான் எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.01 17:35:28 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.